அபிராமி உன் அருளும் தர வேண்டுமே
அழைக்கின்ற குரல் கேட்டு வர வேண்டுமே (2)

அபிராமி உன் அருளும் தர வேண்டுமே...

கண்ணிரண்டும் உன் உருவைக் காண வேண்டுமே
செவி இரண்டும் உன் புகழைக் கேட்க வேண்டுமே (2)
எண்ணத்தில் உன் நாமம் உறைய வேண்டுமே
உன் மடிமேல் தலை வைத்து உறங்க வேண்டுமே

அபிராமி உன் அருளும் தர வேண்டுமே
அழைக்கின்ற குரல் கேட்டு வர வேண்டுமே
அபிராமி உன் அருளும் தர வேண்டுமே...

உன்னை விட்டால் எனக்கு வேறு யாரடி தாயே
இமைகுள்ளே மூடி வைத்து காத்து நின்றாயே
உன்னை விட்டால் எனக்கு வேறு யாரடி தாயே
உன் இமைகுள்ளே மூடி வைத்து காத்து நின்றாயே
அன்னைகிங்கே உபசாரம் செய்வதும் உண்டோ
பிள்ளை என்னை அணைத்துக்கொள்ள தாமதம் ஏனோ

அபிராமி உன் அருளும் தர வேண்டுமே
அழைக்கின்ற குரல் கேட்டு வர வேண்டுமே
அபிராமி உன் அருளும் தர வேண்டுமே...

கும்பிடவோ இரண்டு கைகள் போதவில்லையே
கூப்பிடவோ நாவொன்று போதவில்லையே (2)
வார்த்தைகள் இனிமேலும் எனக்கு இல்லையே
தாயே உன் கருணைக்கு எல்லை இல்லையே

அபிராமி உன் அருளும் தர வேண்டுமே
அழைக்கின்ற குரல் கேட்டு வர வேண்டுமே
அபிராமி உன் அருளும் தர வேண்டுமே...